# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடங்கள்

## கண் மருத்துவ ஆலோசகர் பதவி
## Post of Consultant Ophthalmologist

**மேற்கூறிய மருத்துவ நிபுணர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்திலிருந்து (PGIM) பொதுவான கண் சிகிச்சை நிபுணத்துவத்திற்கான MD சபைச் சான்றிதழ் சகிதம் நிபுணத்துவ மருத்துவ அதிகாரியாகவிருக்க வேண்டும். இலங்கை மருத்துவ பேரவையின் நிபுணர் பதிவிலக்கத்துடன் நிபுணத்துவ மருத்துவ பதிவேட்டில் பதிவு செய்திருக்க வேண்டும்.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பள அளவு** : SL 03 - ரூபா 210,000.00 - 12x6530 - ரூபா 288,360.00 மாதாந்தம். (2027-01-01) இதற்கு புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்** : நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2026 ஏப்ரல் 06ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

**2026-03-17.**